# புனித பிரான்சிஸ் சேவியர் செமினரி, வசந்தகம் - எண்ணிமப்படுத்தல்

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ்பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாத்து இலவசமாகத் திறந்த வெளியில் அனைவரும் பயன்பெறும் வகையில் கிடைக்கச்செய்யும் முக்கிய பணியை மேற்கொள்ளும் இலாப நோக்கமற்ற நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த வெளியில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அறிமுகம்

புனித பிரான்சிஸ் சேவியர் செமினரி, குருநகர் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளது. இச் செமினரியானது கத்தோலிக்க பாதிரியார்களை உருவாக்குவதற்காகவும் அவர்களுக்கான குருத்துவக்கல்வி மற்றும் குருத்துவப்பட்டத்தினை வழங்குவதற்காகவும் நிறுவப்பட்டது. இது யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் ஒரு மறைமாவட்ட செமினரி, அத்துடன் ஏனைய மறைமாவட்டங்களுக்கும் மற்றும் சமய சபைகளின் கல்வியாளர்களுக்கும் கருத்தரங்குகளை வழங்குகிறது.

## செயற்றிட்ட நோக்கம்

இச் செமினரியின் வசந்தகம் எனும் நூலகமானது ஏராளமான இறை நூல்களையும் மிகவும் பழைமையான ஆவணங்களை கொண்டுள்ளது. அந்த வகையில் இவ்வாவணங்களை எண்ணிமப்படுத்தி ஆவணப்படுத்தல் மிகவும் அவசியமாகும்.

## செயற்றிட்ட காலவரையறை

இச் செயற்றிட்டமானது ஒரு வருட காலப்பகுதியைக் கொண்டுள்ளது. இக்காலப்பகுதிக்குள் செமினரி நூலகத்திலுள்ள அனைத்து ஆவணங்களும் எண்ணிமப்படுத்தப்பட்டு இச்செயற்றிட்டத்தின் நோக்கம் பூரணப்படுத்தப்படும்

எதிர்பாக்கப்படும் செலவீனம்
**LKR 4,657,574**

மேலதிக விபரங்களுக்கு
https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132